பக்கங்கள்: 09 விலை : 20/-

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 10 செவ்வாய்க்கிழமை 24.06.2020 கதிர் 99

# கருணாவுக்கு எதிராகவும் போர்க்குற்ற விசாரணை!

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து




கொழும்பு, ஜூன் 24

முன்னாள் பிரதி அமைச்சர் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு எதிராகப் போர்க்குற்ற விசாரணை அவசியம் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

2

*மஹிந்தானந்த, கருணாவின் சர்ச்சைக்குரிய கருத்துக்களினால்*

## கடும் சீற்றத்தில் பிரதமர் மஹிந்த! வேட்பாளர்களுக்கும் எச்சரிக்கை!!

கொழும்பு, ஜூன் 24

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் கருணா அம்மான் என அழைக்கப்படும்

2

## பொருளாதாரம் தொடர்பில் கோட்டாவுக்குப் பூச்சியமே!

**மத்திய வங்கியினரை எப்படி விமர்சிக்க முடியும் என மங்கள கேள்வி கேட்டு மஹிந்தவுக்கு கடிதம்**

கொழும்பு, ஜூன் 24

மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் உயர்மட்ட அரச அதிகாரிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடுமையாக விமர்சித்து மக்கள் மத்தியில் ஏளனத்துக்குள்ளாக்கியுள்ளமை ஜனாதிபதிக்கு பொருளாதார ரீதியில் எவ்வித ஆக்கபூர்வமான நுட்பம் கிடையாது என்பதை வெளிப்படையாக எடுத்துக்காட்டியுள்ளது.

2

## யாழ். மாநகர முதல்வரின் தனிப்பட்ட பணியாளர்களை இடைநிறுத்துவதற்கு எதிப்பு

**சபையிலிருந்து ஈ.பி.டி.பி உறுப்பினர் வெளிநடப்பு**

யாழ்ப்பாணம் , ஜூன் 25

யாழ். மாநகர சபையில் மாநகர முதல்வரின் தனிப்பட்ட பணியாளர்களாகப்பணியாற்றும் 6 ஊழியர்களை இடைநிறுத்தி வாழ்வாதாரத்தை பாதிக்கும் தீர்மானத்தை ஏற்கமுடியாது எனக்கூறி ஈ.பி.டி.பி உறுப்பினர் இளங்கோ சபையில் இருந்து வெளியேறினார்.

நிதிக்குழுவின் 5ஆவது கூட்ட அறிக்கையை ஆராய்ந்தபோது முதல்வரின் தனிப்பட்ட ஆளணியினரான 6 பேரில் மூவரை ஏற்கனவே நிறுத்திய எஞ்சிய மூவரும் பதில் முதல்வரின் அலுவலகத்தில் பணியாற்றி வருகின்றனர்.

2

## யாழ். மாநகர முதல்வரின் ஆறு பணியாளர்கள் நீக்கம்

**தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**

யாழ்ப்பாணம் , ஜூன் 25

யாழ். மாநகர சபையில் 4 உறுப்பினர்களுக்கு இரு நாள் சம்பளம் இரத்துச் செய்ததமைக்காக ஒரு மணி நேரம் வாதிட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள், 6 ஊழியர்களை நிரந்தரமாகப் பணி நீக்கம் செய்யுமாறு தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றினர்.

கொரோனா காலத்தில் 4 ஊழியர்கள் ஊரடங்குவேளையில் பணியாற்றிய இரு நாள்களுக்குச் சம்பளம் கணக்கிட்ட போதும் பின்பு தினவரவில் இரத்துச் செய்யப்பட்டுச் சம்பளம்

2

## மஹிந்தானந்தவிடம் இன்று விசாரணை

கொழும்பு, ஜூன் 24

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் சிறப்பு பொலிஸ் பிரிவு ஒன்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

மஹிந்தானந்த அளுத்கமகேவின் நாவலப்பிட்டியில் உள்ள அலுவலகத்திற்கு சிறப்பு பொலிஸ் குழு ஒன்று இன்று காலை சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

2011ஆம் ஆண்டில் மும்பையில் இடம்பெற்ற கிரிக்கெட் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை - இந்திய அணிகள் மோதின. அதில் இந்திய அணி வெற்றிபெற்று உலகக் கிண்ணத்தை சுவீகரித்தது.

இந்த இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயச் சதி இடம்பெற்றது என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

2

## பலாலி பொலிஸ் நடமாடும் பிரிவு வளலாயில்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 24

பலாலி பொலிஸ் நிலையம் தனது சேவைகளை மக்கள் பெற்றுக்கொள்ள வசதியாக உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே வளலாய் அந்தோனிபுரத்தில் தற்காலிகமாக நடமாடும் பொலிஸ் பிரிவு ஒன்றை ஆரம்பித்துள்ளது.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் வழிகாட்டலில் இந்தப் பொலிஸ் சேவை இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.



2



## பலாலி பொலிஸ் நடமாடும் பிரிவு .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி பொலிஸ் நிலையம் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ளது. இதனால் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அச்சுவேலி, காங்கேசன்துறை மற்றும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையங்களில் சேவைகளைப் பெற்று வந்தனர்.

இந்த நிலையில் பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்ற விடயம் காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அதுதொடர்பில் நடவடிக்கை எடுத்த அவர், பலாலி பொலிஸ் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படும் வரை பலாலி - வளலாய் அந்தோனிபுரத்தில் நடமாடும் பொலிஸ் பிரிவு ஒன்றை இன்று ஆரம்பித்து வைத்தார். இந்தப் பிரிவு 24 மணித்தியாலங்களும் சேவையை வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தனிப்பட்ட பணியாளர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் முதல்வரின் பணிக்காக நியமித்த 6 தனிப்பட்ட ஊழியர்களையும் நிறுத்தவேண்டும் என்ற தீர்மானத்தைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ம.மயூரன் முன்மொழிய அதே கட்சியைச் சேர்ந்த பத்மமுரளி வழிமொழிந்தார். இந்தத் தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்ததால் வாக்கெடுப்பிற்கு விடும் நிலைமை ஏற்பட்டது.

வாக்கெடுப்புக்குத் தயார் செய்யப்பட்டபோது ஈ.பி.டி.பி. உறுப்பினர் இளங்கோ மேற்கண்டவாறு தெரிவித்து வெளியேறிய நிலையில் கூட்டமைப்புக்கு ஆதரவாக வாக்களிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட ஐ.தே.கட்சியும் வாக்கெடுப்பின்போது சபையில் இருந்து நழுவியது.

## யாழ். மாநகர ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தப்பட்டமையைக் கண்டித்து குரல் எழுப்பப்பட்டதைச் சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

இதன் பின்பு நிதிக்குழுவின் 5ஆவது கூட்ட அறிக்கையை ஆராய்ந்தபோது முதல்வரின் தனிப்பட்ட ஆளணியான 6 பேரில் மூவரை நிறுத்தப்பட்ட நிலையில் எஞ்சிய மூவரும் பதில் முதல்வரின் அலுவலகத்தில் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் முதல்வரின் பணிக்காக நியமித்த 6 தனிப்பட்ட ஊழியர்களையும் நிறுத்தவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ம.மயூரன் முன்மொழிய அதே கட்சியைச் சேர்ந்த பத்மமுரளி வழிமொழிந்தார். இந்தத் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்தது.

இதன்போது வாக்கெடுப்பு கோரப்பட்டதால் பதில் முதல்வர் வாக்கெடுப்புக்கு உத்தரவிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளன்,

இந்தச் சபையில் சற்று முன்னர் நான்கு ஊழியர்களின் இரு நாள் சம்பளம் வெட்டியமை தொடர்பிலும், ஒரு ஊழியரின் மரணத்தால் பாதிக்கப்படும் அவரது குடும்ப வாழ்வாதாரம் தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டபோது அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டோம்.

இப்போது 6 பணியாளர்களின் வேலையை நிரந்தரமாக நிறுத்தி அவர்களின் வாழ்வியலை கேள்விக்கு உட்படுத்தி வயிற்றில் அடிக்கும் செயலுக்கு வாக்கெடுப்பு நடத்தும் அவலத்திற்குச் சபை சென்றுள்ளது - என்றார்.

இறுதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி , ஈ.பி.டி.பி ஆகியவற்றுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன இணைந்து பிரேரணைக்கு ஆதரவாக 17 வாக்குகளும் எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 வாக்குகள் மட்டுமே கிடைத்தது. 2 வாக்குகளினால் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

## கடும் சீற்றத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் சமீபத்தில் வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடும் சீற்றம் வெளியிட்டுள்ளார்.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றது எனவும், உலகக் கிண்ணத்தை இந்தியா அணிக்கு இலங்கை அணி தாரைவார்த்தது எனவும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருந்தார்.

இது சர்ச்சையை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து மஹிந்தானந்தவைக் கடுமையாகச் சாடியுள்ள பிரதமர் மஹிந்த, ஒன்பது வருடங்களின் பின்னர் வெளியான இந்தக் கருத்தைத் திருத்திக்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

அன்று மும்பையில் இடம்பெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டியை நேரில் பார்வையிடச் சென்றிருந்த மஹிந்த ராஜபக்ஷ, அந்தப் போட்டியுடன் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வுபெறவுள்ள முத்தையா முரளிதரனுக்காக உலகக் கிண்ணத்தை இலங்கை அணி வெல்ல வேண்டும் என விருப்பம் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆனையிறவு சண்டையில் ஒரே இரவில் 3 ஆயிரம் வரையிலான இராணுவத்தினரைத் தாம் கொன்றழித்ததாக முன்னாள் பிரதி அமைச்சர் கருணா அம்மான் வெளியிட்டுள்ள கருத்து தெற்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சிகளையும், அக்கட்சிகளின் வேட்பாளர்களையும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளுமாறு பிரதமர் மஹிந்த கேட்டுக்கொண்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய இந்தக் கருத்துக்களினால் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பிரசாரம் பாதிக்கப்படலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## பொருளாதாரம் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தற்போதைய நிதி அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார வீழ்ச்சிக்கும், மத்திய வங்கிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அரசு ஆரம்பத்தில் இருந்து பொருளாதார ரீதியில் எடுத்த தீர்மானங்களே பொருளாதார வீழ்ச்சியைத் துரிதப்படுத்தியுள்ளது என்பதை முதலில் தெரிந்துக் கொள்ள வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய வங்கியின் பொறுப்பு நிதி அமைச்சரின் கீழ் காணப்படுகின்றது. ஜனாதிபதி மத்திய வங்கியின் ஆளுநர்களைக் கடுமையாகத் திட்டித் தீர்த்த பின்னர் தாங்கள் எவ்வித மறுப்போ அல்லது நிதி அமைச்சர் என்ற ரீதியில் எந்த நிலைப்பாட்டையும் இதுவரையில் வெளிப்படுத்தவில்லை. நியாயமான காரணிகளுக்கு நீங்கள் ஒருபோதும் குரல் கொடுக்க மாட்டீர்கள் என்ற காரணத்தால் இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன் எனவும் அதில் மங்கள மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மஹிந்தானந்தவிடம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிவிப்பு தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அமைவாக இந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது.

# ரணில் அணியைக் குத்தகைக்கு வாங்கிவிட்டது ராஜபக்ஷ படை

## அவ்வணிக்கு அளிக்கப்படும் வாக்குகள் வீணானவை என்கிறார் வேலுகுமார்



கொழும்பு, ஜூன் 25

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அணியினருக்கு அளிக்கப்படும் வாக்குகளானவை இறுதியில் ராஜபக்சக்களின் வாக்கு வங்கிக்கே சென்றடையும். எனவே, மக்கள் மதிநுட்பத்துடன் வாக்குரிமையைப் பயன்படுத்தவேண்டும். - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் குமார் மேலும் கூறியதாவது,

2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலின்போது பெரும் இழுத்தடிப்புக்கு மத்தியில் இறுதி கட்டத்திலேயே சஜித் பிரேமதாசவை வேட்பாளராக அறிவிப்பதற்கு ரணில் தரப்பு நடவடிக்கை எடுத்தது. இக்காலப்பகுதிக்குள் மொட்டு கட்சியினர் கீழ்மட்டங்களில் பிரச்சாரங்களை முடித்திருந்தனர்.

அதாவது ராஜபக்ச தரப்பு பாதிதூரம் ஓடிய பின்னரே, சஜித்துக்கு ஓட்டத்தையும், தேர்தல் ஆட்டத்தையும் ஆரம்பிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. திட்டமிட்ட அடிப்படையில் காலைவாரி, கழுத்தறுப்பு செய்யும் வகையிலேயே ரணிலும், அவரின் சகாக்களும் இறுதிவரை காலத்தைக் கடத்தினர். பிரச்சாரங்களின்போதுகூட துரோகங்களே கட்டவிழ்த்துவிடப்பட்டன.

முன்கூட்டியே சஜித்தை வேட்பாளராக அறிவித்து, அவரின் வெற்றிக்காக ரணில் அணியும் உண்மையாக உழைத்திருந்தால் வெற்றி சாத்தியமாகியிருக்கும். பொறுப்பற்ற விதத்தில் வேண்டுமென்றே சில அறிவிப்புகளை விடுத்து, ராஜபக்சக்களுக்கு மறைமுகமாக ஒத்துழைப்பை வழங்கியதாலேயே முடிவுகள் மாறின.

இம்முறையும் சஜித்தை பிரதமர் வேட்பாளராக அறிவிப்பதற்கும், புதிய கூட்டணியின்கீழ் போட்டியிடுவதற்கும் அனுமதி வழங்கிவிட்டு, இறுதி நேரத்தில் ரணில் குழு குத்துக்கரணம் அடித்தது.

சஜித் தலைமையிலான கூட்டணி பலமடைந்துவந்ததாலும், தேர்தலில் மக்கள் அமோக ஆதரவை வழங்குவார்கள் என்பதாலுமே ரணில் தரப்பை மஹிந்த அணி குத்தகைக்குவாங்கி தற்போது சில நாடகங்கள் அரங்கேற்றிவருகின்றது. ரணில் தரப்பு தனியாக போட்டியிட்டாலும் இறுதியில் ராஜபக்ஷ முகாமிலேயே அந்த அணி சரணடையும். எனவே, அவர்களுக்கு வழங்கப்படும் வாக்குகள் வீணானவையாகும் என்பதை மக்கள் புரிந்தகொள்ளவேண்டும்.

ஜனநாயகத்துக்கு எதிராகவும், மக்களை அடக்கி ஆளவும் முற்படும் இந்த அரசாங்கத்துக்கு முடிவு கட்ட ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிப்போம். - என்றார்.

## கருணாவுக்கு எதிராகவும் போர்க்குற்ற ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல வருடங்களுக்கு முன்னரே அவரைப் போர்க்குற்ற விசாரணைக்கு உடுத்தியிருக்க வேண்டும். ஆனால், இலங்கையின் போரின்போது படையினரைப் பெருமளவில் கொலை செய்ததாக அவர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து இலங்கை அதிகாரிகள் இது குறித்து விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளனர் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

கருணா அம்மான் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தபோதிலும் அதன்பின்னர் விலகி அரச சார்பு ஆயுத குழுவுக்குத் தலைமை தாங்கிய வேளையிலும் பெருமளவு மனித உரிமை மீறல்களுக்குக் காரணமாக இருந்துள்ளார். சட்டவிரோத படுகொலை கள், கடத்தல்கள், சித்திரவதை செய்தல், பொதுமக்கள் மீதான தாக்குதல்களை அவர் மேற்கொண்டுள்ளார்.

கருணா அம்மானின் தலைமையின் கீழ் செயற்பட்ட விடுதலைப்புலிகளின் கிழக்குப் படையணியினர் 1990ஆம் ஆண்டு ஜூனில் சரணடைந்த நூற்றுக்கணக்கான பொலிஸாரைக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

கருணா அம்மான் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலகி அரச சார்பு ஆயுத குழுவுக்குத் தலைமை தாங்கிய வேளையும் அவரது குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகள் ஒருபோதும் விசாரணை செய்யப்படவில்லை.

மாறாக அரசின் சார்பில் அவரது படைப்பிரிவினர் மேலும் மேலும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர்.

கருணாவை ஒருபோதும் அவரது குற்றங்களுக்காகப் பொறுப்புக்கூறச் செய்யவில்லை.

2007இல் அவர் போலியான ஆவணங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டார். அவ்வேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ போலிக் கடவுச்சீட்டை வழங்கினார் என கருணா வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

எனவே, கருணாவைப் போர்க்குற்றங்கள் மற்றும் ஏனைய பாரிய மனித உரிமைகள் மீறல்களுக்காக விசாரணை செய்ய வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீதே போர்க்குற்றச்சாட்டுகள் உள்ளதன் காரணமாக கருணா நீதியின் பிடியிலிருந்து தப்பக்கூடும் - என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏன் சீறுகின்றது தெற்கு?

கடந்த சில தினங்களாக தமிழர் தரப்பில் மட்டுமல்லாமல், தென்னிலங்கையிலும் அதிக சர்ச்சையைக் கிளப்பும் விடயமாக உருவெடுத்திருப்பது கருணாவின் பேச்சு. எல்லா ஊடகங்களிலுமே இது எதிரொலிக்கின்றது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் கிழக்குத் தளபதியான விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான் இப்போது அம்பாறை மாவட்டத்தில் கல்முனையைத் தளமாகக் கொண்டு தனது கட்சியான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியில் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

அதுவும் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவுப் போக்கில் செயற்படும் கருணா அம்மான் சில தினங்களுக்கு முன்னர் நாவிதன்வெளியில் ஒரு மக்கள் சந்திப்பில் ஆற்றினார் எனக் கூறப்படும் உரையே இப்போது பெரும் களேபரத்தைத் தோற்றுவித்திருக்கின்றது.

தமிழில் அவர் ஆற்றிய உரை தென்னிலங்கையில் குருடன் யானை பார்த்த கதை போல விஸ்வரூபம் எடுத்திருப்பதுதான் விந்தை. ஒவ்வொரு அரசியல்வாதியும் தத்தமது நிலைப்பாட்டுக்கு – தத்தமது கட்சிகளின் நலனில் அடிப்படையில் – கருணா விவகாரத்தைப் பிய்த்து உதறிக் கொண்டிருக்கின்றனர்.

முதலில் அவர் அந்த உரையில் என்ன கூறினார் என்பதை நோக்க வேண்டும்.

*“காரைதீவு ‘சியாமன்’ (தவிசாளர்) ஒரு அறிக்கை விட்டிருக்கின்றார் என்னைப் பற்றி – கருணா அம்மான் கொரோனாவை விடக் கொடியவன் எண்டு...”*

*“அது உண்மைதான் – அவன் சொன்னது. கொரோனா வந்து ஒன்பது பேர்தான் செத்திருக்கின்றார்கள். நாங்கள் ஓரிரவிலேயே ஆனையிறவில் இரண்டாயிரம், மூவாயிரம் ‘ஆர்மியை’ கொன்றவர்கள். விளங்குகின்றதா...? சத்தியமாகத்தான் சொல்லியிருக்கின்றான்.. பரவாயில்லை... ஜெயசிகுறுவில் எத்தனையாயிரம், கிளிநொச்சியில் எத்தனையாயிரம், அவனுக்கு அதுகள் தெரியாது போலும்...!”* இதுதான் கருணா சொன்ன வார்த்தைகள்.

இதற்கு எதற்காக இத்தனை காட்டுக் கூச்சல்? இத்தனை பிரளயம்? இவ்வளவு எடுப்பு?

யுத்தத்தில் இரு தரப்பிலும் பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டார்கள். அதில் ஒரு தரப்புக்குத் தளபதியாக இருந்தவர் கருணா.

இலங்கை அரசினதும், இலங்கைச் சட்டத்தினதும் பார்வையில் புலிகளின் தாக்குதலும், படையினரை அழித்தமையும் குற்றங்களாகவும், பயங்கரவாதச் செயல்களாகவும் அர்த்தம் பண்ணப்படலாம்.

அவ்வளவும் செய்து விட்டு வந்தவர் கருணா என்பதை அறிந்து கொண்டுதான் அவரை அரசுத் தரப்பும், தென்னிலங்கையும் அரவணைத்துக் கொண்டன.

கருணாவின் வழிகாட்டலில் தாக்குதல்களுக்குச் சென்றவர்களில் சிலர் படையினரிடம் சிக்கிக் கொண்டு இன்னும் அரசியல் கைதிகளாகச் சிறைகளிலும் தடுப்புக் காவலிலும் அல்லற்பட்டுக் கெண்டிருக்கின்றனர்.

அப்படி அவர்கள் சிறையில் அவலப்படும் போதுதான் அவர்களை அத்தாக்குதலுக்கு ஆசி கொடுத்துத் தைரியம் வழங்கி அனுப்பிய கருணா அம்மானுக்கு சுதந்திரக் கட்சியில் உப தலைவர் பதவியும், நாடாளுமன்றத்தில் தேசியப் பட்டியல் நியமனமும், பிரதி அமைச்சர் பதவியும் கொடுத்து அலங்காரம் பண்ணிப் பார்த்து மகிழ்ந்தது ராஜபக்ஷ ஆட்சிப் பீடம்.

இப்போது கருணா என்ன புதிதாகச் சொல்லி விட்டார்?

தம்மைக் கொரோனாவை விடக் கொடியவர் என்று விமர்சித்தமையை உறுதிப்படுத்துவதற்காகத் தாம் புலிகளின் தரப்பில் இருந்த போது, தாமும் சேர்ந்து செய்தவற்றைக் கூறி தமது ‘கொடும் தன்மையை’ நிரூபிக்க அவர் முயற்சித்திருக்கின்றார். அதைக் கூட ‘நான்’ செய்தேன் என்று அவர் கூறவில்லை. ‘நாங்கள்’ செய்தோம் என்றுதான் பழையவற்றை நினைவூட்டுகின்றார்.

அவர் அதனைத் தமது ‘சாதனைச் சிறப்பு’ ஆகக் காட்டி வாக்குக் கேட்கவில்லை. தம்மைக் கொரோனாவை விடக் கொடூரமானவர் என்று விமர்சித்தபோது அதிலும் விடக் கொடூரம் புரிந்தவர்கள் நாங்கள் என்ற அடிப்படையில் எதையோ சொல்ல வருகின்றார் அவர்.

அத்தகைய விடயம் தென்னிலங்கையால் கொடூரமாகப் பார்க்கப்படலாம். வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களுக்கு அது சாதனையாகத் தோன்றலாம்.

ஆனால், அத்தகைய விடயங்கள் எல்லாம் யுத்த காலத்தில் அரங்கேறித்தான் இருக்கின்றன. அதை நினைவூட்டுவதற்காகக் கருணா தண்டிக்கப்பட வேண்டும் என்பது அபத்தமாகும்.

உண்மையில், அத்தகைய சிறப்புமிக்க இயக்கத்தை அழிவுக்குள் தள்ளிய குற்றத்துக்காக இந்த விடயத்தை நினைவு கூர்வதன் மூலம் தன்னைத்தானே கருணா நொந்து கொள்ள வேண்டுமே தவிர, தென்னிலங்கை இதில் சிற்றமுற எதுவுமே இல்லை என்பதுதான் நிஜயம்.

## நியமனத்தை மீண்டும் வழங்குமாறு செயற்திட்ட உதவியாளர் கோரிக்கை



வவுனியா, ஜூன் 24

தமது நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர் என வவுனியா மாவட்டச் செயற்திட்ட உதவியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இடைநிறுத்தப்பட்ட தமது நியமனங்கள் தொடர்பாக வவுனியா மாவட்ட அரச அதிபருக்கு இன்றயதினமஇன்று மகஜர் கையளித்து விட்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

முந்தைய நல்லாட்சி அரசாங்கம் 27.03.2019 அன்று எடுத்த அமைச்சரவை முடிவின்படி (எண்: 19/0888/105 / 015 – I), தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு அமைச்சகங்கள் மூலம் மேற்கூறிய பதவிக்கு விண்ணப்பங்கோரி வர்த்தமானி வெளியிடப்பட்டது.

பிற்காலத்தில், ஜூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் முறையே இரண்டு நேர்காணல்கள் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றன. பின்னர் 2019 அன்று 6,547 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டதுடன், நியமிக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டது. மேலும் நியமிக்கப்பட்டவர்கள் தங்களது கடமைகளை தமது தொடர்புடைய அலுவலகங்களில் ஏற்றுக்கொண்டனர்.

இந்தச் சூழலில், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதுடன், நியமனத்தை இடைநிறுத்திய சுற்றறிக்கை அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் 23.09.2019 அன்று தேர்தல் ஆணையத்தின் தலைவரால் தொலைநகலில் அனுப்பப்பட்டது. மேற்கண்ட நியமனங்கள் 16.09.2019 அன்று வழங்கப்பட்டன என்பதையும், தேர்தலுக்கான திகதி 18.09.2019 என்று அறிவிக்கப்பட்டதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும், தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்ட நியமனங்களை மீட்டெடுக்கும் சுற்றறிக்கை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொலைநகலில் அனுப்பப்பட்டது. நாங்கள் 18.11.2019 அன்று மாவட்ட செயலகங்களில் எங்கள் கடமைகளை ஏற்கச் சென்றபோது, அத்தகைய மேலதிக தகவல்கள் அவர்களால் வழங்கப்படவில்லை என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பின்னர், எங்கள் நியமனங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

தேர்தல் ஆணையத்தின் தலைவரால் மேற்கண்ட நியமனத்தை மீட்டெடுக்க தொடர்ந்து வலியுறுத்தப்பட்ட போதிலும், இது தொடர்பாக இதுவரை எந்த தகவலும் அரசிடம் இருந்து கிடைக்கவில்லை.

சுமார் எட்டு மாதங்களாக நாங்கள் வேலையில்லாமல் இருக்கிறோம். இதன் விளைவாக, நாமும் எங்கள் குடும்ப உறுப்பினர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். வாழ்வாதார இழப்பு காரணமாக கடுமையான துயரங்களுக்கு ஆளாகியுள்ளோம்.

ஆகையால், எங்கள் குறைகளை தயவு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிளிற்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்வதோடு, எமது செயற்திட்ட உதவியாளர் நியமனம் குறித்து ஆவனம் செய்யும் படி, வவுனியா மாவட்ட செயற்திட்ட உதவியாளர்கள் சார்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு வவுனியா மாவட்ட அரச அதிபர் எஸ்.எம்.சமன் பந்துலசேன ஊடாக மகஜர் ஒன்றினை கையளித்துள்ளோம் – என்றனர்.

## பி.சி.ஆர். பரிசோதனை ஒரு லட்சத்தை கடந்தது

கொழும்பு, ஜூன் 24

இலங்கையில் இதுவரை ஒரு இலட்சம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

நேற்று மாத்திரம் 1,232 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மொத்த பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை 98,634 ஆக இருந்தது.

இன்றைய நிலைவரப்படி, பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைக் கடந்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் பரவிய கொரோனா வைரஸ் தாக்கம் தற்போதும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இலங்கையில் பெரும்பாலும் கொரோனாவினால் பாதிக்கப்படுபவர்கள் வெளிநாட்டில் இருந்து வருகைத் தருபவர்களாகவே உள்ளனர்.

இதனைக் கருத்திற்கொண்டு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை 1,000 ஆக அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சுக்குப் பிரமதர் அலுவலகம் அண்மையில் ஆலோசனை வழங்கியது.

இதனையடுத்து, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வரும் அனைத்துப் பயணிகளுக்கும் விமான நிலைய வளாகத்துக்குள்ளேயே பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் ஜூன் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## 154 இலங்கையர் நாடு திரும்பினர்!



கொழும்பு, ஜூன் 24

கொரோனா தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்களை நாட்டுக்கு மீண்டும் அழைத்து வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இன்று பிரிட்டனிலிருந்து 154 பேர் விசேட விமானம் மூலம் அழைத்து வரப்பட்டனர்.

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் இருந்து இந்த 154 பேரையும் ஏற்றிக்கொண்டு ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானம் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது.

இவ்வாறு அழைத்துவரப்பட்ட அனைவரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# விசவாயுவிலிருந்து தப்பியவர்களை இலகுவாக கொல்கிறது கொரோனா

**ஆய்வில் அதிர்ச்சித் தகவல்**

போபால் விச வாயுக் கசிவால் பீடிக்கப்பட்டு உயிர்தப்பிய பலர் கொரோனாவுக்குப் பலியாகிய பரிதாபச் சம்பவம் இந்தியாவில் நடந்துள்ளது.

இந்தியாவின் மத்தியபிரதேசத் தலைநகர் போபாலில் கொரோனா வைரஸால் உயிரிழந் தவர்களில் 75 சதவீதம் பேர் 1984ஆம் ஆண்டு நிகழ்ந்த போபால் விச வாயுக் கசிவால் பாதிக்கப்பட்டு உயிர் தப்பியவர்கள் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஜீன் மாதம் 11ஆம் திகதி வரை நடத்தப் பட்ட இந்த ஆய்வில் போபால் நகரில் 60 பேர் கொரோனா வைரஸால் உயிரழந்துள்ளார் கள். அதில் 48 பேர் போபால் விச வாயுக் கசிவால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டு உயிர்தப்பியவர்கள் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

இறந்த அனைவருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி ஏலவே குறைந்திருந்தமையே காரணம் என்று தெரிவிக்கப் படுகிறது.

**போபால் விசவாயுக் கசிவு**

1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி இரவு மத்தியபிரதேச மாநிலம் போபாலில் யூனியன் கார்பைட் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலையில் நடந்த விபத்தால் கசிந்த விசவாயு அந்தப் பகுதியில் பரவிது. 3ஆயிரத்து 500க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

சுமார் ஐந்து லட்சம் மக்கள் ஊனமடைந்தனர். இந்த மோசமான பேரழிவால் பாதிக்கபட்டவர்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை, நிவாரணமும் கிடைக்கவில்லை. விபத்து நடந்து 31 ஆண்டுகள் கடந்தும், ஏறக்குறைய மூன்றாவது தலைமுறையும் இந்த விச வாயுவால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுப் பல குழந்தைகள் கோரமாகவும், பல்வேறு பிறவிக்குறைபாடுகளுடனும் பிறப்பது நிகழ்கிறது.







## ஆயுர்வேத மருந்துக்கு இந்தியா அரசு தடை

கொரோனா வைரஸுக்குச் சிகிச்சையளிப்பதற்கு 'கரோனில் மற்றும் ஸ்வாசரி' என்ற ஆயுர்வேத மருந்தை யோகா குரு பாபா ராம்தேவ் பதஞ்சலி என்ற நிறுவனம் அறிமுகப்படுத்தி விளம்பரப்படுத்தியது.

அந்த விளம்பரம் வெளியான ஒரு சில மணி நேரங்களில் அந்த மருந்தின் விளம்பரங்களை நிறுத்துமாறு இந்திய அரசு உத்தரவிட்டதோடு அந்த நிறுவனம் விளம்பரப்படுத்திய அந்த மருந்தின் சோதனை மற்றும் சிகிச்சை என்பதற்கான விவரங்களையும் வெளியிட அறிவுறுத்தியது. இந்த மருந்துகளை நோயாளிகளுக்குக் கொடுத்துப் பார்த்ததில் சாதகமான பலன்கள் கிடைத்ததாகப் பதஞ்சலி நிறுவனம் தெரிவித்தது.

ஆனால், மருந்தின் பெயர், உள்ளிடப்பட்ட மருந்துப் பொருள்களின் சேர்க்கை விவரம், எந்த மருத்துவமனையில் யார் யாரிடம் இந்த மருந்து சோதனை செய்யப்பட்டது, அது வழங்கப்பட்ட அளவு, நிறுவன அறிவியல் குழுவின் அனுமதி, சோதனைப் பதிவு விவரம், ஆய்வின் முடிவு தரவுகள் ஆகியவற்றைக் கேட்டுள்ளதோடு, முடிவுகள் தெளிவுபடுத்தப்படும் வரை இந்த மருந்துக்கான விளம்பரங்களை உடனடியாக நிறுத்தவும் இந்தியாவின் அரச ஆயுள் அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

## தூதுவர்களை குறையுங்கள் இந்தியத் தரப்பு தெரிவிப்பு

இந்தியாவின் தலைநகர் டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணிபுரிகின்ற ஊழியர்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைக்குமாறு இந்தியாவின் வெளியுறவுத்துறை வலியுறுத்தியுள்ளது.



இதேபோல, பாகிஸ்தனின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தில் உள்ள ஊழியர்களில் அரைவாசிப்பேரைத் திரும்ப அழைத்துக் கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. அத்தோடு டெல்லியில் உள்ள பாகிஸ்தான் ஊழியர்களை 7 நாள்களுக்குள் இவ்வாறு அரைவாசியினராகக் குறைக்க வேண்டும் என்றும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தூதுவர்கள் விவகாரம்**

பாகிஸ்தானில் தங்கியிருந்த இந்தியத் தூதரக அதிகாரிகள் இருவர் கடந்த வாரம் பாகிஸ்தானில் விபத்து ஏற்படுத்திய குற்றத்தில் கைதாகி விடுவிக்கப்பட்டவார்கள்.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதர கத்தில் பணியாற்றி வந்த அவர்கள் இரு வரும் காரில் வெளியே சென்றபோது விபத்தை ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்றதாகவும், பொதுமக்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் பாகிஸ்தான் தெரிவித்தது. பின்னர் அவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் பாகிஸ்தானில் இருந்த இந்தியத் தூதரக அதிகாரிகளான விமான ஆலோசகர் குழுத் தளபதி மனு மித்ரா, செயலர் எஸ்.சிவ் குமார், பங்கஜ், செல்வதாஸ் பால், திவிமு பிரம்மா ஆகிய 5 பேரும் வாகா எல்லை வழியாக இந்தியாவுக்கு திரும்பினர்.

இவர்கள் இந்தியாவுக்குள் நுழைந்த பின்னர் இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ஊழியர்களைக் குறைத்துக்கொள்ளுமாறு இந்தியத் தரப்பு தெரிவித்துள்ளது.

## இந்தியாவில் 'சீனா வங்கி'

**எல்லைப் பதற்றத்துக்கு நடுவே தகவல்**

இந்தியா சீனா இடையே பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் 'பாங்க் ஒவ் சீனா' என்ற பெயருடைய சீனாவின் வங்கி ஒன்று இந்தியாவில் தனது முதல் கிளையைத் திறக்க இருப்பதாகச் சமூகவலைதளங்களில் தகவல் பரவி வருகிறது.




இந்தக் கிளை மும்பையில் திறக்கப்பட இருப்பதாகக் குறிப்பிட்டு, முன்னணி செய்தி நிறுவனம் ஒன்றால் வெளியிட்ட செய்தி போன்று காட்சியளிக்கும் ஒளிப்படக் கோர்ப்புடன் இந்தத் தகவல் பரவிவருகிறது. தனது கிளையைச் சீன வங்கி இந்தியாவில் நிறுவுவதற்கு இந்திய மத்திய வங்கி அனுமதி அளித்து இருப்பதாகவும், பிரதமர் மோடி சீன அதிகாரிகளுக்கு வழங்கிய வாக்குறுதியின்பேரில் இது நடைபெறுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் உண்மைத் தன்மை குறித்து ஆராயப் பட்டதில் இது போலிச் செய்தி என்று தெரியவந்துள்ளது.

**தந்தை, மகன் சாவு விவகாரம்**

## பிரேத பரிசோதனைகளை காணொலிப் பதிவாக்குக!

**நீதிமன்றம் உத்தரவு**



தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் பொலிஸாரல் அழைத்துச் செல்லப்பட்ட தந்தை - மகன் ஆகிய இருவரும் சிறையில் அடுத்தடுத்து உயிரிழந்த நிலையில் அவர்களுக்கு நீதிகோரி உறவினர்களும் அந்தப் பகுதி மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுதொடர்பாகஇரண்டு பொலிஸார் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாரின் தாக்குதலில் தந்தை - மகன் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

இதனால், இறந்த இருவரது சடலங்களையும் மூன்று மருத்துவர்கள் அடங்கிய குழு பிரேத பரிசோதனை செய்யவேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை உத்தரவிட்டது. அத்தோடு அந்தப் பிரேதப் பரிசோதனையை காணொலி வடிவில் பதிவுசெய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# பிறந்த 3குழந்தைகளுக்கும் கொரோனா!





## அதிர்ச்சியில் மெக்சிக்கோ சுகாதாரத துறை

ஒரே பிரசவத்தில் பிறந்த 3 குழந்தைகளுக்குக் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. மெக்சிக்கோவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இதுவரை இப்படியான ஒரு சம்பவம் நடந்ததில்லை என்று குறிப்பிடுகின்ற மெக்சிக்கோவின் சுகாதார அதிகாரிகள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

மெக்சிக்கோவின் சான்லூயிஸ் பொட்டோசி மாகாணத்தில் உள்ள மருத்துவமனையில் 2 ஆண் குழந்தைகள், ஒரு பெண் குழந்தை என ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகளை ஒரு தாய் பெற்றெடுத்திருக்கிறார். அந்தக் குழந்தைகளுக்குக் கொரோனாத் தொற்று இனம்காணப்பட்டிருக்கிறது. ஒரு ஆண், ஒரு பெண் என இரு குழந்தைகள் உடல்நிலை தேறி வருகின்றன. நலமாக இருக்கின்றன. மற்றொரு ஆண் குழந்தைக்குச் சுவாசப் பிரச்சினை நீடிப்பதால் தொடர் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

புதிதாகப் பிறந்த குழந்தைக்கு அதே நாளில் கொரோனா வைரஸ் தொற்றுவது இல்லை. கொரோனா தொற்று உடையவர்கள் அந்தக் குழந்தையை அணுகினால் தொற்று ஏற்படுவதற்குச் சாத்தியமுண்டு. ஆனால் இந்தக் குழந்தைகளை அப்படி யாரும் நெருங்கவும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் இந்தக் குழந்தைகளுக்கு தாயின் கருப்பையில் இருந்தபோது, கர்ப்ப காலத்தில் நஞ்சுக்கொடி வழியாக கொரோனா வைரஸ் பரவி இருக்க முடியுமா என்று மருத்துவ நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

அந்தக் குழந்தைகளுடைய தாய், தந்தைக்கு கொரோனாவுக்கான அறிகுறிகள் இல்லை. அவர்கள் அறிகுறியற்று கொரோனாத் தொற்றாளர்களாக இருக்கிறார்களா என்று கண்டறிவதற்குப் பரிசோதனை நடத்தப்படுகிறது. பிறந்த குழந்தைக்குத் தாயின் நஞ்சுக்கொடி வழியாகக் கொரோனாத் தொற்று பரவியதை அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி விஞ்ஞானிகள் கண்டறிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிறேசில் அதிபருக்கு நீதிபதி எச்சரிக்கை!



பொது இடங்களுக்குச் செல்லும் போது முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும், இந்த உத்தரவை அவர் மதிக்காவிட்டால், நாள்தோறும் 390 டொலர் அபராதம் செலுத்த வேண்டும் என்று பிறேசிலின் மாவட்ட நீதிபதி ஒருவர் உத்தரவிட்டுள்ளார்.

மக்கள் வீட்டுக்குள் முடங்கி இருந்தால், கொரோனா ஏற்படுத்தும் பாதிப்பைவிட மோசமான பொருளாதாரப் பாதிப்பு ஏற்படும். மக்கள் வெளியே வந்து சுதந்திரமாக பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுங்கள் எனத் தொடர்ந்து பேசி வருகிறார் பிறேசிலின் அதிபரான ஜேர் போல்சோனாரோ.

அதுமட்டுமல்லாமல் அவர் வெளியே செல்லும் சமயங்களில் முகக்கவசம் அணிவதில்லை. இந்த நிலையில் மக்களிடையே சென்றுபேசும்போதும், கூட்டங்களில் பங்கேற்கும்போதும் அவர் முக்கவசம் அணியாமல் இருந்ததால் மாவட்ட நீதிபதி ஒருவர் கடுமையாக எச்சரித்துள்ளார். தலைநகர் பிரேசிலியாவை விட்டு போல்சோனாரோ எங்கு சென்றாலும் கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும்.

அவ்வாறு நீதிமன்ற உத்தரவை அவர் மதிக்காவிட்டால் அவர் நாள்தோறும் 390 டொலர் அபராதம் செலுத்த வேண்டும் என்றும் அந்த நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## ட்ரம்புடன் பேசத் தயார் மதுரோ தெரிவிப்பு



அமெரிக்கா அதிபர் ட்ரம்புடன் பேச்சில் ஈடுபடுவதற்குத் தான் தயாராக இருப்பதாக வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே மதுரோ இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: -

தேவையேற்பட்டால் ட்ரம்புடன் பேச்சு நடத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அதே சமயம் அந்தப் பேச்சுகள் மரியாதைக்குரியனவாக இருக்கவேண்டும் என்றார்.

### வெனிசுவெலா - அமெரிக்கா

எண்ணெய் வளமிக்க தென்அமெரிக்க நாடான வெனிசுலாவில் கடுமையான பொருளாதார நெருக்கடியும் அரசியல் குழப்பமும் நிலவி வருகிறது. அந்த நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மதுரோவின் ஆட்சிக்கு தொடர்ந்து நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன. வெனிசுலாவின் நாடாளுமன்றத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ஜுவான் குவைடோ, தன்னை இடைக்கால அதிபராக அறிவித்துள்ளார். அமெரிக்கா அவருக்குப் பின்னால் இருந்து செயலாற்றுகிறது. தனது நாட்டில் நிலவும் அரசியல் குழப்பத்துக்கு அமெரிக்காவே முழுக் காரணம் என்று மதுரோ குற்றம்சாட்டி வருகிறார்.

## துருக்கியில் 4 பேர் கைது!

பிரான்ஸ் நாட்டுக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டில் துருக்கியப் பொலிஸாரால் 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த 4 பேரும் போலி அடையாள அட்டைகளைத் தயார் செய்து துருக்கியின் தேசிய புலனாய்வு அமைப்பின் முகவர்கள் போல நடித்து நாட்டின் பழமைவாதக் அமைப்புகள் மற்றும் மதக் குழுக்கள் பற்றிய தரவுகளைச் சேக ரித்து வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவர்கள் துருக்கியின் மத நல இயக்குநரகம் மற்றும் அதன் ஊழியர்களின் தனிப்பட்ட தகவல்களை திருடியாதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 4 பேரின் நடவடிக்கைகளைத் துருக்கிப் பொலிஸார் இரகசியமாகக் கண் காணித்து வந்தனர் என்றும், இவர்கள் பிரான்ஸ் நாட்டுக்கு உளவு வேலை பார்த்து வந்ததைக் கண்டு பிடித்ததால் கைது செய்யப்பட்டனர் என்றும் துருக்கி தரப்பில் தெரிவிக்கப் பட்டது.







இரண்டாம் உலகப் போர் வெற்றியை குறிக்கும் வகையில் மிகப் பெரிய இராணுவப் பேரணியை இன்று ரஷ்யா நடத்தியது. மே மாதம் 9ஆம் திகதி நடக்கவிருந்த இந்தப் பேரணியைக் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ரஷ்ய அதிபர் புடீன் தள்ளிவைத்தார். இரண்டாம் உலகப் போரில் நாசிப் படைகளை சோவியத் ஒன்றியம் (இன்றைய ரஷ்யாவை உள்ளடக்கியது) வீழ்த்தி 75 ஆண்டுகள் நிறைவடைந்தமையை நினைவு கூரும் வகையில் இந்த நிகழ்வு அமைந்தது.

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்

# சில உண்மைகள், பல பொய்களுடன்

# சூடுபிடித்துள்ள அரசியல் நாடகங்கள்

கொரோனாத் தாக்கத்தால் இலங்கை அரசியல் துறை குறிப்பாக நாடாளுமன்றத் தேர்தல் பல இழுபறிகளுக்கு மத்தியில் முடிவுக்கு வந்தது. நடைபெறப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தல் சுதந்திர இலங்கையின் பதினாறாவது தேர்தலும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் (1978ஆவது அரசமைப்பின்படி படி) ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தல் என்பதும் குறிப்பிடத்தக்கது. பல இழுபறிகளுக்கு மத்தியில் காணப்பட்ட இந்தத் தேர்தலுக்கு தற்போதுதான் முற்றுப்புள்ளி வைக்



கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் தற்போது சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கும் கொரோனா நோய்த் தாக்கத்துக்கு இலங்கையும் இலக்காகியதைத் தொடர்ந்து தேர்தல் பிற்போடப்பட்டது. இவ்வாறான நிலையில் அதைத் நடாத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழு திகதி அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மக்களை ஏமாற்றுகின்ற வாக்குறுதிகள்

உலகில் இன்னும் கொரோனாத் தொற்று முழுக் கட்டுப்பாட்டுக்குள் வராத நிலை இருக்கின்ற போதிலும் அது இலங்கையில் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள நிலையில் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கட்டாயத்தின் நிமித்;தம் தேர்தல் நடத்தப்படவுள்ளது. வழமைபோன்று தேர்தல் காலங்களில் சில அரசியல்வாதிகள் தமது தேர்தல் வெற்றிக்காக மக்களை ஏமாற்றும் வாக்குறுதிகளை வழங்கத் தொடங்கி விட்டனர். இவர்களின் தேர்தல் பரப்புரை நாடகங்கள் மிகவும் தீவிரமான முறையில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. தேர்தல் காலங்களில் மட்டும் வாக்காளர்களைத் தேடிச்சென்று அதைச் செய்வேன், இதைச்செய்வேன் என ஏமாற்று வாக்கு றுதிகளை வழங்குவதற்குச் சில வேட்பாளர்கள் வாகனப் பேரணியைத்தொடங்கிவிட்டனர். இவர்கள்வழங்குகின்ற



வாக்குறுதிகள் சில நேரங்களில் செயல்வடிவமும், சில நேரங்களில் காணல் நீராகவும், சில நேரங்களில் ஏமாற்றுப் பேச்சாகவும் அமையலாம்.

### ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டும்போக்கு

கட்சிகளுக்கு இடையில் தற்போது போட்டிகள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஒரு கட்சி இன்னொரு கட்சியைக் குற்றம் சுமத்திப் பேசுவது, ஒருவரை ஒருவர் கடந்த காலங்களில் செய்த தவறுகள், குற்றங்கள் மோசடிகளைச் சுட்டிக்காட்டிப் பேசுவது என்பன தாராளமாகவே ஆரம்பித்துள்ளன. இதனிடையே மக்கள் ஆதரவற்ற ஒருசில பேரினவாத அரசியல் வாதிகள் தமது வெற்றிக்காகச் சிறுபான்மை அரசியல்வாதிகள் பற்றிப்பேசி இனரீதியிலான பிளவுகளை ஏற்படுத்தவும், அவர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்திப் பழிபோடும் வார்த்தைகளையும்



கையில் எடுத்துள்ளனர். பொதுவாகத் தேர்தல் காலங்களில் மட்டும் கட்சி வேட்பாளர்களும், சுயேட்சை வேட்பாளர்களும் மக்களிடமிருந்து வாக்குகளைப் பெறுவதற்காக வாக்காளர்களை நாடிச் சென்று பல வாக்குறுதிகளை வழங்குவது வழமையான செயலாகும். ஆனால் அந்த வாக்குறுதிகள் தேர்தலில் வெற்றி பின்னர் நிறைவேற்றப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியாகும்.

### மக்களுக்காகப் பாடு படும் தன்மையற்றவர்கள்

3ஆயிரத்து 652 அரசியல் கட்சி வேட்பாளரும், 3ஆயிரத்து 800 சுயேச்சை வேட்பாளரும் இந்த முறை தேர்தலில் போட்டியிடுவதற்குக் களமிறங்கியுள்ளனர். இந்த வேட்பாளர்களில் மக்களால் நேரடியாக 196 பேரும், தேசியப் பட்டியலில் 29 பேருமாக எல்லாமாக 225 வேட்பாளர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் மக்களுக்குப் பல வாக்குறுதி



களை வழங்குகின்றனர். இவர்கள் முன்வைக்கின்ற வாக்குறுதிகளில் எத்தனை வாக்குறுதிகள் நிறைவேற்றப்படப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். தேர்தலில் போட்டியிடுகின்ற ஒவ்வொரு வேட்பாளரும் தான் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுகின்றனர். இதே போன்று இன்னும்சில அரசியல்வாதிகள் எப்படியாவது தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றக் கதிரையையும், அமைச்சுப்பதவியைப் பெற்றுக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள் ளனர். இன்னும் சிலர் தன்னுடைய இலாப நோக் கத்துக்காகத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இதனால் இவர்கள் எவரிடமும் மக்களுக்காகப் பாடுபடும் தன்மை இல்லாமலிருக்கிறது.

### வாக்காளர்களின் நம்பிக்கையிழந்த பரப்புரைகள்

இம்முறை தேர்தல் பரப்புரைகள் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாகச் சமூக வலைத்தளங்கள் மற்றும் ஊடகங்கள் மூலமாகத்தான் பெரும்பாலும் இடம்பெறுகின்றன. பரப்புரை நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போது வேட்பாளர்களின் வாக்குறுதிகளை நம்புவதற்கு வாக்காளர்கள் தயாராக இல்லாத சூழ்நிலை காணப்படுகின்றது. கடந்த காலங்களில் வேட்பாளர்களின்வாக்குறுதிகளைநம்பிஅவர்களுக்குவாக்களித்துவிட்டு நமக்கு நல்லது நடக்கும் என்று எதிர்பார்த்து இருந்த வாக்காளர்களுக்கு ஏமாற்றமே கிடைத்திருக்கின்றது.

தேர்தல் பிரச்சாரத்தின் போது வீடுகள் அமைத்தல், உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தருதல், போக்குவரத்து வசதிகள் செய்தல், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், பட்டதாரிகளுக்குத் தொழில் வாய்ப்புக்களைச் செய்து கொடுத்தல், சுய தொழில் வாய்ப்பை ஊக்குவித் தல், கிராம அபிவித்திநடவடிக்கைகளை முன்னெடுத்தல், தொழிலாளிகளுக்குரிய அனைத்துவிதமான வசதிகளையும் செய்து கொடுத் தல், கல்வி கற்கின்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பங்களித்தல், வேலைதேடி வெளிநாடு செல்கின்ற இளைஞர்களுக்குச் சொந்த நாட்டிலே தொழில் மையங்களை உருவாக்கி சிறந்த தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல் எனப் பல வாக்குறுதிகளைப் பொது மக்களிடம் முன்வைக்கின்றனர். இவ்வாறு பொது மக்களிடம் முன்வைக்கப் படுகின்ற வாக்குறுதிகள் வேட்பாளர்களால் நிறைவேற்றப்படுகின் றனவா என்றுபார்த்தால் பாதியளவாகவே நிறைவேற்றப்படுகின்றது எனலாம்.

### சரியான தெரிவு முக்கியம்

வேட்பாளர்கள்எல்லோரும்தாம்தான்சரியானவர் – தகுதியானவர் என்று கோச மிட்டு நிற்கின்ற தேர்தல்காலத்தில்வாக்காளர்கள்தமதுவாக்குகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். வாக்களிக்கின்ற தமது உரிமையைச் சரியாகப் பகுத்தாராய்ந்து பயன்படுத்த வேண்டும். பொது மக்கள் பொறுப்புணர்வோடு நடந்து கொள்வது முக்கியம். தமது பிரச்சினைகளை நாடாளுமன்றம் வரை கொண்டு சென்றுஅதற்கானதீர்வைப்பெற்றுக்கொடுக்கக்கூடிய சிறந்த அரசியல் தலைவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். கடந்த காலங்களில் மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட்ட சிறந்த அரசியல் தலைவர்களைத் தெரிவு செய்தல் அவசியம். வாக்களிக்கின்ற தமது ஜனநாயக உரிமையை மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

அதேபோன்று வேட்பாளர்களும் பொது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைச் செய்து கொடுப்பதில் உறுதியாய் இருக்க வேண்டும். வேட்பாளர்கள் மற்றும் பிரமுகர்கள் தமது பரப்புரைகளை அதிகப்படுத்தி வருவதைக் காணமுடிகின்றது. தாங்கள் போட்டியிடும் மாவட்டங்களில் குறிப்பாக அங்குள்ள



தொகுதிகளிலுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துக் கொண்டே வேட்பாளர்கள் தமது பரப்புரைத் தந்திரோபாயங்களை முன்னெடுக்கின்றனர். தேர்தல் விஞ்ஞாபனங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குறுதிகளோ அல்லது பரப்புரை மேடைகளில் வெளிப்படுத்தும் வாக்குறுதிகளோ வேட்பாளர்கள் வெற்றி பெற்று அதிகாரத்துக்கு வந்த பின்னர் நிறைவேற்றப்படுகின்றனவா என்பது பலர் விடயத்தில் கேள்விக்குறியானதாக அமைந்திருந்தாலும், சில வேட்பாளர்கள் மக்களுக்குக் கொடுக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றனர். இவ்வாறான வேட்பாளர்களைத் தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புவது வாக்காளர்களாகிய எமக்கு இருக்கின்ற மிக முக்கிய பணியாகும்.

(கட்டுரையாளர் - கிழக்குப்பல்கலைக்கழக, சமூகவியல் துறை மாணவர்.)



# மகாஜன நிறுவுநர்
# பாலவர் துரையப்பா பிள்ளை!

க. வசந்தரூபன்



யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியின் நிறுவுநரும் அந்தக் கல்லூரியின் முதல் அதிபருமாகிய பாவலர் துரையப்பாபிள்ளை எனும் சிந்தனையாளரின் நினைவுதினம் இன்றாகும். கிராமப்புற மக்களின் கல்வித்தேவையைப் பூர்த்தி செய்யவும் சைவத்தமிழ்ப் பண்பாட்டுடன் கூடிய கல்விமரபுக்குப் புத்துயிர் ஊட்டவும் தெல்லிப்பழை பிரதேசத்தில் வயல்வெளிகள் சூழ்ந்த அம்பனைக் கிராமத்தில் பெருவிருட்சமாக நின்றபடி இன்று கல்வி ஒளியூட்டும் மகாஜனக் கல்லூரிக்குப் பாவலர் துரையப்பாபிள்ளையே 1910.10.14 அன்று அடிகோலினார். இன, மத வேறுபாடின்றி எல்லா மக்களும் கல்வி கற்கலாம் என்ற பரந்த நோக்கோடு 'மகாஜன' என்ற நாமத்தைத் தாம் தொடக்கிய அந்தக் கல்விச்சாலைக்குச் சூட்டினார். ஆங்கிலேயர் ஆட்சியில் பல சவால்களை எதிர்கொண்டே மகாஜனக் கல்லூரியை வளர்த்தெடுத்தார்.

### பாவலருக்குப் பின்னர் சின்னப்பாவும் மகனும்

பாலவர் துரையப்பா 1929.06.24 இல் அமரத்துவமடைய அவரது சகலனும் கவிஞருமாகிய சின்னப்பா அவர்கள் மகாஜனக் கல்லூரியைப் பொறுப்பெடுத்துத் தளரவிடாது நடத்தி வந்தார். கவிஞர் சின்னப்பா 1945ஆம் ஆண்டில் இயற்கை எய்த, பாவலரின் மகனும் ஆசிரியருமாகிய ஜயரத்தினம் அவர்கள் கல்லூரியின் அதிபரானார். இவரது காலத்தில்



மகாஜனா கல்வி, விளையாட்டு, கலாசாரம் எனப் பலதுறைகளிலும் பரிணமித்தது. தந்தையார் பாவலரின் கனவுக்குத் தனயன் ஜயரத்தினம் செயல்வடிவம் கொடுத்தார்.

### துரையப்பாவின் நீண்ட பணிகள்

சமூகச் சிந்தனையாளரான பாவலர் துரையப்பாபிள்ளை மகாஜன என்ற கல்விக்கூடத்துடன் மட்டும் தனது பணியை நிறுத்திவிடாது புதிய நல்ல சிந்தனைகளை மக்களிடம் புகுத்தினார். மகாகவி பாரதியாரின் சமூகச் சிந்தனைகளை நோக்கிய கவிதைகளுக்கு முன்னரே, பாவலர் ஈழத்தில் கவிதைகள் ஊடாகச் சமூகத்தை நல்வழிப்படுத்தும் கருத்துக்களை விதைத்தார். சமூகத்தில் புரையோடிருந்த சாதிப்பிரச்சினை, விவசாயிகளின் வேதனை, பெண் கல்வி, ஜீவகாருண்யம், தமிழ் மொழியின் மகத்துவம், ஆங்கிலக் கல்வியின் அவசியம் என்பன தொடர்பில் விழிப்பூட்டினார். இலக்கண இலக்கியக் கையேடு, தொழில் கல்வி, விஞ்ஞானக்கல்வி, உயர்கல்வி என்பவற்றின் அவசியம் தொடர்பான சிந்தனைகளையும் பாவலர் விதைக்கத் தவறவில்லை. பாவலரின் உயரிய சிந்தனையையும் நவமகாஜன சிற்பி ஜயரத்தினம் அவர்களின் ஆத்மார்த்தமான அர்ப்பணிப்பும் இன்றுவரை மகாஜனக் கல்லூரியை வழிநடாத்தி வருகின்றது.

### நகரப் பாடசாலைகளுக்கு நிகராக மகாஜன

நவமகாஜனசிற்பியின்காலம்மகாஜனவரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படுகின்றது. நகரப் பாடசாலைகளுக்கு நிகராகப் பொறியியல், மருத்துவத் துறைக்கு மாணவர்களை அனுப்பியது மகாஜனக் கல்லூரி. கல்விக்கு நிகராக இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மகாஜன ஒளிர்ந்தது. இலங்கைக் கலைக்கழகம் தேசிய மட்டத்தில் நடத்திய நாடகப் போட்டியில் 1965 – 1969 வரை தொடர்ச்சியாக 5 வருடங்கள் முதலாமிடத்தைத் தனதாக்கிச் சாதனை படைத்தது. இதேபோல விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனாவின் முதலாம் பிரிவு அணி 1967 – 1974 வரை தொடர்ச்சியாக 8 வருடங்கள் சம்பியனாக வலம் வந்தது. பாவலரின் சிந்தனையில் உதித்து,

**இன்று அவரது நினைவுதினம்**

தனயன் நவமகாஜன சிற்பி ஜயரத்தினம் அவர்களால் புடம்போடப்பட்ட மகாஜனக் கல்லூரியானது, நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளுக்கும் மாற்றங்களுக்கும் ஏற்ப தன்னை தகவமைத்துக் கொண்டு இன்றுவரை நகரப்பாடசாலைகளுக்கு நிகராக பல்துறைகளிலும் மிளிர்கின்றது. இன்று நாட்டில் மாற்றமடைந்து வரும் கல்வி நடைமுறைகளுக்கும் போக்குகளுக்கும் ஏற்ப தன்னை தயார்ப்படுத்திச் சிறந்த கல்விப் பணியாற்றுகின்றது மகாஜனா.

### பரீட்சைகளில் தடம் பதிப்பு

மகாஜனவில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வருடாவருடம் சராசரியாக 15 இற்கு மேற்பட்ட மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்து வருகின்றனர். க.பொ.த (சா/த) பரீட்சையில் சராசரியாக 80 வீதமான மாணவர்கள் தமிழ், கணிதம் உட்பட 3சி, 3எஸ் பெற்றுச் சித்தியடைந்து வருகின்றனர். சராசரியாக 5 மாணவர்கள் 9ஏ சித்தியும் 30 மாணவர்கள் 5ஏ இற்கு மேல் சித்தியும் பெற்றுவருகின்றமை சிறப்பம்சமாகும். க.பொ.த.உயர் தரப் பரீட்சையில் 90 வீதமான மாணவர்கள் பல்கழைக்கழகங்களுக்கான தகுதியை பெற்றுக்கொள்வதோடு, சராசரியாக 40 மாணவர்கள் பல்கழைக்கழக அனுமதியையும் பெற்றுவருகின்றனர்.

### இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் தடம்

கல்விக்கு நிகராக இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மகாஜனா பெயர்பொறித்து வருகின்றது. நாடகப் போட்டி, பேச்சுப்போட்டி, இசைப்போட்டி, கட்டுரைப்போட்டி, பொது அறிவு விநாடி வினாப் போட்டி, விஞ்ஞான –கணித ஒலிம்பியாட் போட்டி ஆகியவற்றில் மகாஜனா மாகாண, தேசிய மட்டங்கள் என வெற்றிபெற்று வருகின்றது. மகாஜனா விளையாட்டுத் துறையில் தனக்கெனத் தனியிடம் பெற்று விளங்குகின்றது.

(08 ஆம் பக்கம் பார்க்க...)

## மகாஜனா ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை 91 ஆவது நினைவு தினம்

தீரமுற்று திருவடைந்த தெய்வதுரையப்பரது தீர்க்கமான தியாகமதில் தேடி வந்த மகாஜனாவின்.... என்ற மகாஜனா அன்னையின் கொடிக்கீத வரிகளுக்கமைய பாவலர் துரையப்பா பிள்ளை அவர்கள் 1910 ஆம் ஆண்டு விதைத்த மகாஜனாக்கல்லூரி என்ற சிறுவிதை இன்று கிளைபரப்பி பாரிய விருட்சமாக உலக அளவில் பேசப்படும் பாடசாலையாக உருவெடுத்துள்ளதுடன் கல்வியிலும்,விளையாட்டிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுடன் தற்காலத்தில் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கின்றது.

அப்படிப்பட்ட புகழ்பெற்ற மகாஜனாவின் ஸ்தாபகரான பாவலர் துரையப்பாபிள்ளையின் 91 ஆவது நினைவு தினம் இன்று.

பாவலர் துரையப்பாபிள்ளை தந்தையார் அருளம்பலம்; தாய் தங்கம்மா. இவர் தனது ஆரம்பக்கல்வியைத் தெல்லிப்பளை ஆங்கில வித்தியாலயத்திலும் மேற்படிப்பை வட்டுக்கோட்டை செமினரியிலும் (வட்டுக்கோட்டை சர்வசாத்திரக் கல்லூரி) பயின்றார். இவர் 1890 ஆம் ஆண்டு கேம்பிரிஜ் உயர் நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் சித்தியெய்திய பின்னர் சிறிதுகாலம் அரச சேவையில் பணியாற்றி அதனை துறந்து பாணந்துறை தூய யோவான் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

இவரது ஆளுமையும் முற்போக்கு சிந்தனைகளும் பம்பாய் மாநிலத்திலுள்ள கோலாலம்பூர் மின் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் விருத்தி பெற்றன. இவர் 1900 ஆம் ஆண்டு தெல்லிப்பளை ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் அதிபரானார். இவருடைய கன்னிப்படைப்பாகிய கீதரச மஞ்சரி என்னும் நூல் 1901ஆம் ஆண்டுவெளிவந்தது. இவர் 1910 ஆம் ஆண்டு அமெரிக்க மினரிமாருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் தலைமை ஆசிரியர் பதவியைத் துறந்து அதே ஆண்டு மகாஜனக் கல்லூரியை ஆரம்பித்தார்.

இவர் 1921 ஆம் ஆண்டு 'இந்துசாதனம்' பத்திரிகையின் ஆங்கில உதவிப்பத்திராதிபராக நியமிக்கப்பட்டு 1924 இல் பிரதம பத்திராதிபரானார். இவர் ஈழத்தில் புகழ்பெற்ற கவிஞராகவும் திகழ்ந்தார்.

இவரது இலக்கிய நோக்கும் கவிதையில் நவீனத்துவமும் ஈழத்தில் பின்வந்த பல கவிஞர்களுக்குத் தடமாய் அமைந்தமை குறிப்பிடத்தக்கது கல்விப்பணி, சமூகப்பணியில் சிறந்துவிளங்கிய




பாவலர் துரையப்பாபிள்ளை 1929 ம் ஆண்டு ஆனி மாதம் 24 ஆம் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தார்

அவர் மறைந்தாலும் அவரால் அம்பனை தெல்லிப்பழையில் ஸ்தாபிக்கப்பட்ட மகாஜனாக்கல்லூரி தன் சாதனையால் அவரின் புகழுக்கு மேலும் வலுச் சேர்க்கின்றது.





# பாடசாலைகளுக்கு கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

(எஸ். நிதர்ஷன்)

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் பாடசாலை வளாகத்தில் கிருமித் தொற்று விசிறும் பணிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் ஒருங்கிணைப்பில் சிறப்பு அதிரடிப் படையினரால் இந்தப் பணி யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையில் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது

3 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 5 கட்டங்களாக மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதன்படி வரும் 29ஆம் திகதி அனைத்துப் பாடசாலைகளுக்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் கடமைக்குத் திரும்பவேண்டும்.

எதிர்வரும் ஜூலை 6ஆம் திங்கட்கிழமை 5,11 மற்றும் 13ஆம் தரங்களில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

எதிர்வரும் ஜூலை 20ஆம் திகதி திங்கட்கிழமை 10 மற்றும் 12ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

அத்தோடு எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதி திங்கட்கிழமை 3,4,6,7,8,9ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

எனினும் தரம் ஒன்று மற்றும் இரண்டில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் பாடசாலைகளுக்கு கிருமித் தொற்று நீக்கி விசுறும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுக்கு உள்பட்ட பாடசாலைகளுக்கு நேற்றுப் புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் ஒருங்கிணைப்பில் சிறப்பு அதிரடிப் படையினரால் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் முதல் பணியாக யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையில் சிறப்பு அதிரடிப் படையினரால் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி நேற்றுக் காலை 8 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

# நிர்வாக சேவைத் துறையில் தனித்தடம் பதித்த ரங்கராஜாவிற்கு மாகாணசபையில் இரங்கல்













(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன்24

கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் காலமான வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் பிரதம செயலாளர் சி.ரங்கராஜவிற்கு வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள மாநாட்டு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தலைமையில் இரங்கல் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப்பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், திட்டமிடலாளர்கள், பிரதம கணக்காளர்கள், உதவிச்செயலாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் மாகாணசபை அலுவலர்கள் என பலரும் கலந்து கொண்டனர். அவர்களில் பெரும்பாலானோர் அமரர் சிவகுருநாதன் ரங்கராஜாவின் நினைவுகளை மீட்டு உரை நிகழ்த்தினர்.

பிரதம செயலாளர் திரு,அ.பத்திநாதன் தனது உரையில் –

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அமரர் சிவ குருநாதன் ரங்கராஜா பலவிதமான திறமைகளை தன்னகத்தே கொண்டிருந்தார். பல கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டவர் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திட்டமிடல் செயன்முறையை ஸ்தாபிக்கும் நோக்கில் கருத்திட்டங்களை வெற்றிகரமாக வழி நடத்திச் செல்வதற்கான கருத்திட்ட வடிவமைப்பு, மக்கள் பங்களிப்புடனான கிராமிய மதிப்பீடு, தர்க்கநெறி கட்டமைப்பு அணுகுமுறை என்பவற்றை மாகாணத்தில் அறிமுகப்படுத்தி அவற்றை நடைமுறைப்படுத்தினார். கருத்திட்டங்களில் மக்களை பங்காளிகளாக மாற்ற வேண்டும் என்பவற்றை வலியுறுத்தியமையுடன் திட்டமிடல் செயன்முறைகளை திறம்பட ஸ்தாபித்தார். அத்துடன் வடக்கு,கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணம் ஆகியவற்றை திறம்பட நிர்வகித்து பல அடைவுநிலைகளை வடக்கு கிழக்கு மக்களிற்காக செயற்படுத்தினார்.– என்றார்.

அமரரது சிறப்புக் குறித்துப் பின்வரும் விடயங்கள் அங்கு நினைவு கூரப்பட்டன:–

அமரர் சிவகுருநாதன் ரங்கராஜா 1949 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பொன்னாலையில் பிறந்து 1977 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டார். அவர் ஒரு நிர்வாக சேவை உத்தியோகத்தராக இருந்தபோதும், அவரது நிர்வாகத்திறனையும், திட்டமிடலில் இருந்த அறிவையும் நோக்கும் போது அமரரது அறிவு, ஆற்றல், திறமை அனைவராலும் போற்றுதற்குரியதாகும். இவர் தான் பணியாற்றிய காலத்தில் பல உயர் பதவியுயர்வுகளை வகித்து அப்பதவிகளுக்கு உயிரோட்டம் கொடுத்து பெருமை சேர்த்தார். வடக்கு கிழக்கு மாகாணம் மற்றும் வடக்கு மாகாணம் ஆகியவற்றில் 2002 – 2010 வரையான காலப்பகுதியில் பிரதம செயலாளர் என்ற முக்கிய பதவியை வகித்து இம்மாகாணங்களுக்கு அளப்பெரிய சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

உண்மை, நேர்மை, கடமை உணர்வு, கண்ணியம், கட்டுப்பாடு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, புத்தாக்க உணர்வு, இரக்க சுபாவம், நவீனத்துவ சிந்தனை என்பவற்றை தன்னகத்தே கொண்டு வாழ்ந்த உயரிய பண்பாளராக விளங்கினார்.

இவ்வாறான ஒரு மனிதாபிமானமிக்க பண்பாளன் மற்றும் தன்னார்வத்துடன் பல பணிகளை மேற்கொண்டு மக்களுக்காக சேவையாற்றிய மகான் எம்மை விட்டு பிரிந்தது எமது சமூகத்திற்கு பேரிழப்பாகும். அமரரது பிரிவு எம் எல்லோருக்கும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தி உள்ளது. இவரின் வழிகாட்டலில் உருவாகியவர்கள் இன்றும் எம் மத்தியில் உயர்பதவிகளை வகித்து சிறப்பாக சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கது. எனவே இவரது இலட்சியப்பாதையை பின்பற்றி மக்களுக்கு சேவையாற்றுவதில் எமது பங்கு அளப்பரியது. – என்று தெரிவிக்கப்பட்டது.

# இணை பாடவிதான செயற்பாடுகளை வரையறை செய்யுமாறு அறிவுறுத்தல்

கொழும்பு,ஜூன்24

எதிர்வரும் சில மாதங்களுக்கு இணை பாடவிதான செயற்பாடுகளை வரையறை செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எச்.எம். சித்ராநந்தவினால் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், விடுபட்டுள்ள கற்கைநெறிகளை முழுமையாகப் பூர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளுக்காக இந்த காலப்பகுதியை பயன்படுத்துமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைநேர ஒன்றுகூடல், நாளாந்த நிகழ்வுகள் உள்ளிட்ட இணை பாடவிதான செயற்பாடுகளை வரையரை செய்யுமாறும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பங்குபற்றக்கூடிய உடற்பயிற்சி செயற்பாடுகள் சுகாதார வழிமுறைகளுடன் பின்பற்றப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

# மகாஜன நிறுவுநர்...

(07 ஆம் பக்கம் பார்க்க...)

மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் முதன்மை நிலையில் விளங்குவதோடு, தேசிய மட்டத்தில் வருடாவருடம் கணிசமான பதகங்களையும் பெற்று வருகின்றது.

மகாஜனாவின் துடுப்பாட்டமும் நகரப் பாடசாலைகளுக்கு நிகராக வளர்ந்துள்ளது. உதைபந்தாட்டத்தில் துரித வளர்ச்சி பெற்றுள்ளது. 2018 இல் முதலாம் பிரிவு ஆண்கள் அணியும் 2019 இல் பெண்கள் அணியும் தேசிய சம்பியன்களாக வலம் வந்து உச்சம் தொட்டுள்ளன. இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் நடாத்தும் போட்டிகளிலும் மாகாஜனா பல வெற்றிக்கிண்ணங்களைப் பெற்றுவருகின்றது.

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் நினைவு தினமானது நிறுவுநர் நினைவுதினமும் சிரேஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும் என வருடாவருடம் வெகுவிமர்சையாக நடாத்தப்பட்டு வருகின்றது. இது மகாஜனன்கள் நிறுவுநருக்குச் செய்யும் கைமாறாகும். உலகமெங்கும் பரந்து வாழும் மகாஜனன்களும் பழைய மாணவர் சங்கங்களும் கல்லூரியின் வளர்ச்சியில் கொண்டிருக்கும் அக்கறையும் பங்களிப்பும் மிக உன்னதமானதாகும் என்பதையும் குறிப்பிட வேண்டும். ஆனால் இன்று பாவலரின் 91 ஆவது நினைவுதினம் கொரோனாத் தொற்றுப் பிரச்சினையால் மிக அமைதியாக நினைவுகூருதலுடன் மட்டும் நடைபெறுகின்றது. இன்றைய உன்னதமான நாளில் சமூக அக்கறைகொண்டு செயற்பட்ட சிந்தனையாளர் பாவலர் துரையப்பா பிள்ளை அவர்களை நாமெல்லோரும் போற்றித் துதிப்போம்.

**கட்டுரையாளர் – பிரதி அதிபர், யாழ்ப்பாணம் மகாஜனக்கல்லூரி.**

# பஸ் கட்டணத்தில் திருத்தம் இல்லை!

## சலுகை வழங்குவது தொடர்பில் அரசு கவனம்

தற்போதைய சூழ்நிலையில் பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ள முடியாது எனவும், அதற்குப் பதிலாக சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் கவனத்தில்கொள்ள முடியும் எனவும் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தனியார் பஸ் உரிமையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காலத்தின் பின்பும் தற்போது மக்கள் பொதுப் போக்குவரத்து பஸ்களை அதிகமாக உபயோகப்படுத்தாத நிலை காணப்படுகின்றது எனவும், சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகளுக்கு இணங்க பஸ்களில் பயணிகளை உள்ளடக்குவதாலும் தமக்கான வருமானம் பெரிதும் குறைந்துள்ளது எனவும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் போக்குவரத்து அமைச்சரிடம் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளன.

இந்தநிலையில் அது தொடர்பில் அமைச்சில் இடம்பெற்ற விசேட பேச்சின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக பஸ் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்றும் மேற்படி சங்கத்தினர் அமைச்சரின் கவனத்துக்கொண்டு வந்தனர்.

எவ்வாறெனினும் கொரோனா வைரஸ் காரணமாக நாட்டின் தற்போதைய நிலையில் அனைத்துத் துறைகளும் வருமானத்தை இழந்துள்ள நிலையில் பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வது உகந்ததல்ல. அது தொடர்பில் தாமோ அல்லது அரசோ உடன்படப் போவதில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் துறையைப் பாதுகாப்பதற்கு அரசு பல்வேறு சலுகைகளை வழங்கியுள்ளது. லீசிங் மற்றும் காப்புறுதி அறவீட்டுக்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டதுடன் இலகு வட்டியில் கடன்களைப் பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தநிலையில் மேலும் நிவாரணங்கள் அவசியமெனில் அது தொடர்பில் பேச்சு நடத்தத் தாம் தயார் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## வில்பத்து வழக்கின் தீர்ப்பு ஜூலை 31இல்

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட குழுவினருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை, எதிர்வரும் ஜூலை 31ஆம் திகதி அறிவிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

வில்பத்து வனப்பகுதியில் கல்லாறு, மறிச்சுக்கட்டி பிரதேசங்களில் பல ஏக்கர் காணி சட்டவிரோதமாக அழிக்கப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் கேந்திர நிலையத்தினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு இன்று மேன்முறையீட்டு நீதிபதிகளான ஜனக் சில்வா மற்றும் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன ஆகிய நீதிபதிகள் குழாமினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## போதைப்பொருளுடன் 4 இளைஞர்கள் கைது!

மட்டக்களப்பு, ஜூன் 24

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் நான்கு சந்தேக நபர்கள் இன்று புதன் கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பிறைந்துறைச்சேனை பகுதியில் வெவ்வேறு இடங்களில் இருந்து ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று சந்தேக நபர்களிடம் இருந்து 4300 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் மற்றைய சந்தேக நபரிடம் இருந்து பாவனைக்கு வைக்கப்பட்டிருந்த இரண்டு கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

## மாலைதீவில் சிக்கியிருந்த 169 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூன் 24

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மாலைதீவில் சிக்கியிருந்த 169 இலங்கையர்கள் இன்று புதன் கிழமை நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் மத்தளை மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து, பரிசோதனை அறிக்கைகள் வெளிவரும் வரை அனைவரும் விமான நிலையத்திற்கு அருகில் உள்ள ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



## ரிஸ்வானின் குடும்பத்தினருக்கு மத்திய மாகாண ஆளுநர் உதவி!

மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தில் கடந்த மே மாதம் 21ஆம் திகதி பாய்ந்து தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த பெண்ணை நீர்த்தேக்கத்திலிருந்து உயிருடன் காப்பாற்றி தனதுயிரைவிட்ட லிந்துலை, ரந்தனிகலவைச் சேர்ந்த ரிஸ்வானின் குடும்பத்தினருக்கு மத்திய மாகாண ஆளுநர் லலித்யூகமவினால் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கு ஒரு தொகை நிதி உதவி வழங்கிவைக்கப்பட்டது.

அத்துடன், குறித்த பெண்ணைக் காப்பாற்ற உதவிய தலவாக்கலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான ருவான் பெர்ணாந்து மற்றும் நிலையத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள் செல்வராஜ் கந்த ரூபன் ஆகிய இருவருக்கும் நினைவுப் பரிசில்களும் ஆளுநரினால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நுவரெலியா மாவட்டத்துக்குப் பொறுப்பான உதவிப்பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, மத்தியமாகாண செயலாளர் காமினி ராஜரட்ணம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## வாக்காளர் அட்டைகள் அச்சிடும் பணி நிறைவு

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டு வருகின்றன எனவும், ஏனைய மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகள் அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன எனவும் அரச அச்சகர் கூறியுள்ளார்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்துக்கான வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணிகள் 50 வீதம் நிறைவடைந்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை 13 மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகள், தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மாத்தளை, நுவரெலியா, மாத்தறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, அநுராதபுரம், பொலனறுவை, இரத்தினபுரி, கேகாலை, காலி, அம்பாந்தோட்டை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகளே ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மற்றும் மொனராகலை தேர்தல் மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகள் நேற்று ஒப்படைக்கப்பட்டன எனவும், வன்னி தேர்தல் மாவட்டங்களுக்குரிய வாக்காளர் அட்டைகள் இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும் எனவும் அரச அச்சகர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கொழும்புத்துறையில் 2 பேர் கைது

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 24

கொழும்புத்துறைப் பகுதியில் வாள் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்புத்துறையில் இன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கொழும்புத்துறைப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் வீடு ஒன்றில் இருந்து வாள் ஒன்றினை மீட்டுள்ளனர்.

இதனையடுத்து இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இருவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் மீட்கப்பட்ட வாளையும் இராணுவத்தினர் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikathir

சித்திரப்போட்டி

தினம் ஒரு தலைப்பு

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

நாளைய (25.06.2020) தலைப்பு
உலங்கு வானுர்தி

சித்திரங்கள் தெளிவான முறையில் படம் பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

## மதுபானம் கடத்தியவருக்குப் பதிலாக வேறு ஒருவர் நீதிமன்றில் முன்னிலை

### 3 பொலிஸார் பணி இடை நீக்கம்

கொழும்பு, ஜூன் 24

மாவனெல்ல, அரநாயக்க பொலிஸ் நிலையத்தின் சப் இன்ஸ்பெக்டர் மற்றும் இரண்டு பொலிஸ் சார்ஜென்ட்கள் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளன.

மதுபானம் கடத்தியதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு பதிலாக வேறு ஒருவரை நீதிமன்றத்தில் நிறுத்திய குற்றச்சாட்டில் இவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்து 60,000 ரூபா இலஞ்சம் வாங்கிக் கொண்டு, வேறு ஒருவரை நீதிமன்றத்தில் இவர்கள் நிறுத்தியுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.06.2020 இல் வெளியிடப்பெற்றது.